NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 15 August 2019

# ஆய்வு: மெர்லயன் தலைசிறந்த மரபுடைமைத் தளம்

சிங்கப்பூர் மரபுடைமை கட்டடங்களில் மெர்லயன், சாங்கி விமான நிலையத்தின் கட்டுப்பாட்டு கோபுரம், சிங்கப்பூர் பூமலை ஆகியவை முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. மரபுடைமை கட்டடங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் 53 கட்டடங்களும் சுற்றுலாத் தலங்களும் தரவரிசைப்படுத்தப்பட்டன.

கிட்டத்தட்ட 1,500 பேரிடம் கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய இந்த ஆய்வில், மேற்கூறப்பட்ட மூன்று இடங்களும் தங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக அவர்கள் கருதினர். இந்த மூன்று இடங்களும் காலப்போக்கில் சிங்கப்பூரை உலக மேடையில் எடுத்துக்காட்டும் சின்னங்களாக உருவெடுத்துள்ளதை கொள்கை ஆய்வுக் கழகத்தின் மூத்த ஆய்வாளர் நட்டேலி பாங் சுட்டினார்.

உதாரணத்திற்கு, சிறந்த சுற்றுலாத் தலமாக சிங்கப்பூரை விளம்பரப்படுத்துவதிலும் தனித்துவம்வாய்ந்த சிங்கப்பூர் அடையாளத்தை மேம்படுத்துவதிலும் பெரும் பங்காற்றும் மெர்லயன், தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் கட்டட மரபுடைமையை சிங்கப்பூரர்கள் எவ்வாறு கருதுகின்றனர் என்பதை ஆராய இந்த ஈராண்டுகால ஆய்வு முதன்முறையாக நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் 18 முதல் 70 வயது வரையிலான சிங்கப்பூரர்கள் பங்கெடுத்தனர்.

இந்த ஆய்வில் குறிப்பாக, 49 முதல் 70 வயது வரையிலான மூத்த பங்கேற்பாளர்கள், காலனித்துவக் கட்டடங்களை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதினர். அந்தக் கட்டடங்களில் முன்னாள் உச்ச நீதிமன்றமும் ஒன்று. இத்தகைய பிரிவினருக்கே வலுவான தேசிய அடையாளம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.